


| | |
|---|---|
| அளவர் / உதவி வரைவாளர் | |
| வரைவாளர் நிலை-III | |
| மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-II | |

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Erode
Date:2023.02.02 17:18:52

# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

## ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம்

## ஈரோடு மாநகராட்சி

**ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு மாநகராட்சி மற்றும் "இ" கிராமம், ரீ.ச.எண்: 1228/6A2 & 6A3-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (ஈரோடு உள்ளூர் திட்டக்குழும திட்டப் பகுதி)**

**EDUCATION ZONE: ( E-8 )**

அளவு : 1 அங்குலம் = 33 அடி (1:400) ( ALL DIMENSIONS ARE IN METER )

Online Application No: JAQKQ80H

மனையின் மொத்தப்பரப்பு : 0.24 ஏக்கர் (அ) 971.00 சமீ

ஒதுக்கிய உட்பிரிவு மனைகள் : 3

மனைஉட்பிரிவின் எல்லை ------------------------

நிலையிலுள்ள சாலை ------------------------

**பொது ஒதுக்கீடு**

பூங்கா ஒதுக்கீட்டிற்கான பரப்பு: {மனைப்பிரிவின் பரப்பு-மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு}x10%

: {971.00 - 0 } x 10% = 97.10 சமீ

பூங்கா பரப்பு : 100.0 சமீ (10.22%) (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் படி உரிய கணக்கு தலைப்பில் 10% பொது ஒதுக்கீட்டிற்கான தொகை செலுத்தப்பட்டுள்ளது)

**கட்டிட வரம்பு :**

9.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்
9.0மீ க்கு மேல் 18.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்

**மூலை முடுக்கு:**

12.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.5 x 1.5மீ விடப்படல் வேண்டும்

**நிபந்தனைகள்**

1. அரசாணை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள்:16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைஉட்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைஉட்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. பிரஸ்தாப மனைஉட்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பிரஸ்தாப மனைஉட்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லதக்கதல்ல.

**SWP / DTCP / ERODE LPA / LAYOUT APPROVAL NO : 30/2023**
**SWP / DTCP / ERODE LPA / PLANNING PERMISSION NO : 03/2023**

உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர் (பொ)
ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம்/நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்